# முதல் நாள் முத்திரை வெளியீட்டிற்கான ஓவியத்தை தெரிவு செய்வதற்காக பாடசாலை மாணவ மாணவியர்கள் மத்தியிலான அகில இலங்கை ரீதியான ஓவியப் போட்டி

ஐக்கிய நாடுகள் சபையினால் 2012ம் ஆண்டானது "சகலருக்கும் நிலைபெறுதகு வலுச் சக்திக்கான சர்வதேச ஆண்டாகப்" பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பிரக்டிக்கல் அக்ஷனானது இந்த விடயம் தொடர்பாக தனது பணிகளை ஆற்றி வருகின்றது என்ற வகையில் இக் கருத்தை பிரதிபலிக்கும் முகமாக முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு தபால் சேவைகள் அமைச்சுடனும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையுடனும் இணைந்துள்ளது. அதற்கான முதல் நாள் உறை வெளியீட்டிற்குப் பொருத்தமான ஓவியத்தை தெரிவு செய்வதற்காக அகில இலங்கை ரீதியாக பாடசாலைப் மாணவ மாணவியர்களுக்கிடையில் இப் போட்டியை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இலங்கையில் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைபெறுதகு வலுச் சக்தி, சக்தி மூலங்கள் தொடர்பாக பாடசாலை மாணவ மாணவியர்களுக்கிடையில் ஆர்வத்தினைக் கட்டியெழுப்புவதாகும்.

போட்டி தொடர்பான விபரங்கள்:

- தலைப்பு: **"சகலருக்கும் நிலைபெறுதகு வலுச் சக்தி"**
- இப் போட்டியில் இலங்கைப் பாடசாலை பிள்ளைகள் மட்டுமே பங்கு பற்ற முடியும்.
- ஓவியங்கள் முதல் நாள் உறை வெளியீட்டிற்காக மட்டுமே தெரிவு செய்யப்படும்.
- ஒருவர் ஒரு ஓவியத்தை மட்டுமே அனுப்ப முடியும்.
- வயதெல்லை: 2012ம் ஜனவரி 31ம் திகதியன்று 14 இற்கும் 18இற்கும் இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்டிருக்க வேண்டும்.
- தலைப்பிற்கு ஏற்றவாறு "நிலைபெறுதகு வலுச் சக்தியை" வெளிப்படுத்துவதாக ஓவியம் அமைந்திருக்க வேண்டும். அது ஒரு வெள்ளைத் தாளில் 13 1/2" நீளம் X 9" அகலம் கொண்டதாக இருப்பதுடன் ஓவியத்தைச் சுற்றி 1/2" அகலத்தில் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும். (கென்ட் தாள் பயன்படுத்துவது மிகவும் விரும்பப்படுகின்றது) எவ் வகையான வர்ணங்களையும் பயன்படுத்தலாம்.
- ஓவிய வரைதாளின் பின்புறத்தில் உங்களின் பெயர், பிறந்த திகதி, முகவரி, தொலை பேசி இலக்கம் (இருப்பின்) பாடசாலையின் பெயரும் முகவரியும், நீங்கள் படிக்கும் தரம் என்பன கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
- ஓவியம் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- ஓவியப் போட்டிக்கான முடிவுத் திகதி 2012 ஜனவரி 31ம் திகதியாகும். உங்கள் ஓவியங்கள் இந்தத் திகதியில் அல்லது அதற்கு முன்பாகவோ இறுதியில் குறிப்பிடப்பட்டடிருக்கும் விலாசத்தினை வந்தடைய வேண்டும். உறையின் இடப்பக்க மேல் மூலையில் "நிலைபெறுதகு வலுச் சக்தி ஓவியப் போட்டி" எனக் குறிப்பிடவும். ஓவியங்கள் பதிவுத் தபாலின் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படலாம்.
- வெற்றியீட்டுபவர் முதல் நாள் உறையின் தரத்திற்கமைய தனது ஓவியத்தினை மாற்றி அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும். வெற்றியீட்டும் ஓவியங்கள் தபால் திணைக்களத்தின் உடமையாகக் கருதப்படும்.
- அனுபவம் கொண்ட நடுவர் குழுவினால் ஓவியங்கள் தெரிவு செய்யப்படுவதுடன் நடுவர் குழுவினதும் பிரக்டிக்கல் அக்ஷனினதும் முடிவு இறுதி முடிவாகும்.
- வெற்றியீட்டும் ஓவியங்களுக்கு பெறுமதியான பரிசில்களும், தகுதியானதாக தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- போட்டியில் பங்கெடுக்க விரும்புவோர் மேல் குறிப்பிட்ட எல்லா நிபந்தனைகளிற்கும் இணக்கம் தெரிவிப்பதாயின் தங்களது ஓவியங்களை அனுப்பி வைக்கவும். மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத ஓவியங்கள் தரமற்றதாகக் கருதப்பட்டு போட்டியில் இருந்து நீக்கப்படும்.

ශ්‍රී ලංකා තැපැල් இலங்கை அஞ்சல் SRI LANKA POST

SRI LANKA SUSTAINABLE ENERGY AUTHORITY

PRACTICAL ACTION Technology challenging poverty

குழுத் தலைவர் - திட்ட அபிவிருத்திப் பிரிவு

பிரக்டிக்கல் அக்ஷன்

இல. 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை, கொழும்பு 05.

தொலை பேசி: 011 2829412 தொலை நகல்: 011 2856188

இணையத்தளம் : www.janathakshana.net, www.practicalaction.org